**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 3, தஞ்சாவூர்**

**முன்னிலை-திருமதி.எஸ்.தங்கமணி, பி.ஏ.எம்.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண் 3, தஞ்சாவூர்.**

**<u>எம்.சி.எண். 1/2017</u>**

**ம.சா.1 கனகா என்பவரின் சாட்சியம்**

**நாள்- 14.09.2018**

மு.வி.

என் பெயர் கனகா. என் கணவர் பெயர் முத்துக்குமார். நான் புதுக்குடிக்கு அருகில் உள்ள சமத்துவபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

1 ஆம் மனுதாரர் எனது மகள் ஆவார். எதிர்மனுதாரர் எனது கணவர் ஆவார். நான் எனது கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் கூறியவை தான். எனக்கும் எனது மகளான 1 ஆம் மனுதாரருக்கும் ஜீவனாம்சமாக மாதம் தோரும் தலா ரூ.20,000/- வழங்க மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மற்றும் நீதிமன்றத்தாருக்கு தக்கதெனக் கருதும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மனுதாரர் தாக்கல் செய்யும் சான்றாவணங்கள்.

1. 02.02.2017 ஆம் தேதியிட்ட திருவையாறு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை நகல் ம.த.சா.ஆ.1 ஆகும்.

2. எதிர்மனுதாரருக்கும் 2 ஆம் மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ம.த.சா.ஆ.2 ஆகும்.

3. 1 ஆம் மனுதாரரனின் பிறப்பிச் சான்றிதழ் ம.த.சா.ஆ.3 ஆகும்.

மனுவில் கண்டுள்ள பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒப்பம்/-திருமதி.எஸ்.தங்கமணி)
நீதித்துறை நடுவர் எண் 3,
தஞ்சாவூர்.